2013 ஏப்ரல் 9]

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப் பரிசீலனை செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அந்த ஏரியைத் தூர் வார தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.

திரு. சு. மாதேஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கோரிக்கையைப் பரிவுடன் ஏற்ற மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 187, மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

187—

கால்நடை மருத்துவமனை

***5078—திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, அஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், நாயக்கனூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பர்கூர் தொகுதி, அஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்திலே, நாயக்கனூர் கிராமத்திற்கு ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நம்முடைய அரசு விதிகளின்படி, 3,000 கால்நடை அலகுகள் அந்தப் பகுதியிலே இருக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆனால், அந்தப் பகுதியிலே 2,400 கால்நடை அலகுகள்தான் இருக்கின்றன.

[2013 ஏப்ரல் 9

எனவே, தற்சமயம் அங்கே கால்நடைக் கிளை நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறு இல்லையென்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் போற்றி வாழும் புரட்சித் தாய், மாண்புமிகு இதய தெய்வம் மாட்சிமை தாங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவுக் களஞ்சியம்; அண்ணா அவர்கள் நான் 'சிலுவை அணியாத கிறித்துவன்' என்றார்கள், நான் 'கைலி கட்டாத முஸ்லிம்' என்றார்கள், எனக்கு எம்மதமும் சம்மதம் என்றார்கள், ஆனால், நாங்கள் வாழுகிற வாழ்க்கையில் எங்களுக்கு மனித குல தெய்வமாய் கிடைத்திருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களோ, (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் வணங்கி வாழ்கிற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களோ, 'ஈசனும் ஒன்றே, இஸ்லாத்தும் ஒன்றே, ஏசுவும் ஒன்றே' என்று திகழ்கின்ற வள்ளலின் வாரிசு. (மேசையைத் தட்டும் ஒலி)

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அஞ்சூர் ஊராட்சி, நாயக்கனூர் கிராமத்தை மையமாகக் கொண்டு அதனைச் சார்ந்திருக்கிற 3 ஊராட்சிகளான சூலாமலை ஊராட்சி, மஜீத்கொள்ளஹள்ளி ஊராட்சி, ஐகுந்தம் ஊராட்சி ஆகிய 34 ஊராட்சிகளைச் சார்ந்து சுமார் 20,000 மக்கள் வசிக்கின்றனர். இங்கு ஆடுகள் 5,000; மாடுகள் 3,000; கோழிப் பண்ணைகள் 25 இருக்கின்ற இப்பகுதியில் வாழும் கால்நடைகள் நோய் நொடியின்றி வாழ, மாண்புமிகு அம்மா அவர்களின் கருணை மிகுந்த பார்வைக்கு என்னுடைய கோரிக்கையை எடுத்துச் சென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசு கால்நடை மருத்துவமனை ஒன்றினை அமைத்துத் தர ஆவன செய்வார்களா என்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

2013 ஏப்ரல் 9]

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவலைப்படத் தேவையில்லை. இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும், எந்த முதல்வரும் செய்யாத, இனிமேலும் செய்ய முடியாத (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு மாபெரும் திட்டமாக நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் விலையில்லாக் கறவைப் பசுக்களையும், ஆடுகளையும் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற அந்தக் கிராமத்திலே, அந்த ஒன்றியத்திலே, வருகின்ற 2013-2014 ஆம் ஆண்டு கால்நடைகளை வழங்கும்போது, அங்கே கால்நடைகளின் எண்ணிக்கை உயர வாய்ப்பிருக்கிறது. எனவே, கால்நடைகளின் எண்ணிக்கை உயரும்போது நிச்சயமாக அந்தப் பகுதிக்குக் கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தரப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் இன்னொரு கருத்தையும் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். இந்தியாவிலேயே கால்நடை வளர்ப்பை முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ள யாதவ மக்கள் அதிகமாக உள்ள மாநிலங்களில், அந்த இனத்தைச் சார்ந்த முதலமைச்சர்கள் இருக்கின்ற மாநிலங்களில்கூட, இந்தத் திட்டம் இல்லை என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் போற்றி வணங்கும் பொன்மனத் தாயே! நாங்கள் வாழ்த்தி வணங்குகின்ற வள்ளலின் வாரிசு அம்மா அவர்களே, தங்களின் பொற்பாதக் கமலங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 188, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.